1973 மார்ச் 30]

என்ன ஆகிறது, அதற்கு இப்படி நிலச் சீர்திருத்தம் என்ற அளவிலே மாநில நில வள வங்கியிலிருந்து ஏதாவது பண உதவி செய்ய முடியுமா என்பவைதான்.

Loan Applications from Ex-Servicemen

* 307 *Q.*—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the number of applications for loans received from Ex-Servicemen sponsored by the Soldiers', Sailors' and Airmen's Board and now pending in the Office of the Tahsildar, South-East Madras; and

(*b*) the action taken or proposed to be taken for the disposal of the pending applications?

முன்னாள் படை வீரர்களிடமிருந்து கடன் கோரி வந்துள்ள விண்ணப்பங்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முப்படை வாரியம் தெரிந்தெடுத்துள்ள முன்னாள் படை வீரரிடமிருந்து வரப் பெற்று, தென் கிழக்குச் சென்னை தாசில்தார் அலுவலகத்தில் தற்போது முடிவு பெறாமல் உள்ள கடன் விண்ணப்பங்கள் எத்தனை?

(இ) முடிவு பெறாமலுள்ள விண்ணப்பங்கள் குறித்து முடிவு எடுப்பதற்காக மேற்கொண்ட அல்லது மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) சென்னை தென் கிழக்குப் பகுதியில் முன்னாள் படை வீரர்களிடமிருந்து 1—4—1970 முதல் 25—9—1972 வரை கடன் கோரி 72 விண்ணப்பங்கள் வந்துள்ளன. இந்த 72 விண்ணப்பங்களில், 15 விண்ணப்பங்கள் முடிவுறா நிலையிலுள்ளன.

(இ) முடிவுறா நிலையிலுள்ள விண்ணப்பங்களை முடிவு செய்வதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து சென்னை, மாவட்ட முப்படை வாரியத்தின் நிர்வாக உட்குழுக் கூட்டங்கள் அனைத்திலும் ஆய்வு செய்யப்படுகிறது.

[1973 மார்ச் 30

நீண்டகாலமாக முடிவுறு நிலையிலுள்ள விண்ணப்பங்களின் பட்டியல் விரைவில் முடிவு செய்யப்படுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்படுகிறது. இந்தப் பொருள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மாதாந்திரக் கூட்டத்தின்போது தாசில்தார்களுடன் விவாதிக்கிறார். முன்னாள் படை வீரர்களின் கடன் விண்ணப்பங்களின் மீதான அறிக்கைகளை விரைவில் அனுப்புமாறு தாசில்தார்களுக்கு அவ்வப்போது ஆணையிடுகிறார். ஏறக்குறைய அனைத்து நேர்வுகளிலும் இம்முறை பின்பற்றப்படுகிறது.

இக்கடன் விண்ணப்பங்களின்மீது தகுதிச் சான்றிதழ்கள் வழங்கி அவற்றை மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அனுப்ப மாவட்ட முப்படை வாரியத்துக்கு 10 நாட்களும், தேவையான விசாரணைகளை நடத்துவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவருக்கு 2 மாதங்களும், கடன் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து ஒப்பளிப்பு வழங்க ஒருங்கிணைக்கப்பட்ட நிதியின் செயலாளருக்கு 20 நாட்கள் எனவும் கடன் விண்ணப்பங்களை முடிவு செய்வதற்கான கால அளவை தமிழ்நாடு அரசு வரையறுத்துள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்த விண்ணப்பங்கள் எவ்வளவு காலமாக முடிவுறாமல் இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அந்த விண்ணப்பங்கள் கடந்த 1970-ஆம் ஆண்டிலிருந்து 1972-ஆம் ஆண்டு வரையில் பல்வேறு தேதிகளில் வந்த விண்ணப்பங்கள் ஆகும். அவைகளைப் பரிசீலனை செய்கிற நேரத்தில், தாசில்தார் அளவிலும், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அளவிலும் பல விவரங்கள் வருவதற்குக் காலதாமதமாகின்றது என்பதாலேயும், விவரங்கள் மேலும் தேவைப்படுகின்றன என்பதற்காகத் திருப்பி அனுப்பப்பட வேண்டிய சிக்கல் இருந்த காரணத்தினாலும் அவை தாமதமாகின்றன.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : சால்வன்சி சர்ட்டிபிகேட் கேட்டு பல விண்ணப்பங்கள் தாமதப்படுகின்றன என்று அறிகிறேன். அது உண்மையென்றும் அந்தப் படை வீரர்களுக்கு இந்த சால்வன்சி சர்டிபிகேட் கொடுப்பதில் பல சங்கடங்கள் இருப்பதாகவும் நான் அறிகிறேன். அதைத் தளர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சால்வன்சி சர்டிபிகேட் வாங்காமல் நம்மாலே கடன் கொடுக்க இயலாது.